සියලු හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved]

කලාප අධ්‍යාපන කාර්යාලය, සම්මන්තුරේ
வலயக் கல்வி அலுவலகம், சம்மாந்துறை
Zonal Education Office, Sammanthurai

5

DIAGNOSTIC TEST FOR GRADE FIVE STUDENTS FOR ASSESSING THE STUDENTS LEARNING ABILITIES - 2025

மாணவர்கள் கற்கும் திறனை மதிப்பீடு செய்வதற்காகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் ஆய்ந்தறி மதிப்பீடு - 2025

2

வினாத்தாள் - I

1 மணித்தியாலம்

சுட்டெண் : ....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

- உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்துஒப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற் கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகிறேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப் படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளி களும் சரியென உறுதிப் படுத்துகிறேன்.	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	V/I/T/CH

[பக். 2 ஐப் பார்க்க]

01. தரப்பட்டுள்ள படத்தை அவதானித்து சரியான கூற்றைத் தெரிவு செய்க.



(1) கடற்கரையில் பிள்ளைகள் சிலர் விளையாடிக் கொண்டிருக்கின்றனர்.

(2) இரண்டு பிள்ளைகள் பொம்மைகளை வைத்து விளையாடுகின்ற அதேவேளை ஏனையோர் தொப்பிகளை அணிந்துள்ளனர்.

(3) தூரத்தில் மரங்களும் வேலியொன்றும் தெரிந்தாலும் பறவைகள் எவையும் தெரியவில்லை

02. தரப்பட்டுள்ள A, B ஆகிய படங்களுக்கிடையிலான வித்தியாசங்கள் எத்தனை உள்ளன?

A

B

(1) 3 (2) 4 (3) 5

03. முதலில் தரப்பட்ட உருவை முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும்போது தோன்றும் வடிவம் எது?

(1)

(2)

(3)

04. கவிதையில் வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொற்கூட்டத்தைக் கொண்ட விடையினைத் தெரிவு செய்க.

மனதில் .... வேண்டும்
உடலில் .... வேண்டும்
சோம்பலை .... வேண்டும்
நாட்டுக்கு .... வேண்டும்.

(1) உறுதி, வலிமை, விலக்கிட, உழைக்க

(2) உறுதி, வலிமை, உழைக்க, விலக்கிட

(3) வலிமை, உறுதி, உழைக்க, விலக்கிட

05. கோலத்தை அவதானித்து இடைவெளிக்குப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.



(1)



(2)



(3)

சுட்டெண்:

06. தேவனின் தாயின் சகோதரனின் மகள் தேவி எனின் தேவன் தேவியின்,

(1) தந்தையின் சகோதரியின் மகன் ஆவான்

(2) தந்தையின் சகோதரனின் மகன் ஆவான்

(3) தாயின் சகோதரனின் மகன் ஆவான்

07. பரீட்சை ஒன்றில் வரதன், சுதாகரன், கிரிதரன், கவிதாஸ், பவிதாஸ் ஆகியோரில் சுதாகரனைவிட 10 புள்ளிகள் குறைவாகப் பெற்ற கிரிதரன் பவிதாஸிலும் 5 புள்ளிகள் கூடுதலாகப் பெற்றான். பவிதாஸிலும் பார்க்க 15 புள்ளிகள் கூடுதலாகப் பெற்ற வரதன் கவிதாஸிலும் பார்க்க 3 புள்ளிகள் குறைவாகப் பெற்றான். இவர்களில் சமனான புள்ளிகள் பெற்ற இருவரும் யாவர்?

(1) சுதாகரன், வரதன் (2) வரதன், கிரிதரன் (3) கிரிதரன், சுதாகரன்

08. எல்லா விதங்களிலும் ஒன்றையொன்று ஒத்த 6 பென்சில்களை இரு பிள்ளைகளிடையே பகிர்ந்து கொடுக்க வேண்டியுள்ளது. ஒவ்வொரு பிள்ளைக்கும் கொடுக்கும் பென்சில்களின் எண்ணிக்கை வேறுபடலாம். ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒரு பென்சிலேனும் கிடைக்குமாறு 6 பென்சில்களையும் பகிர்ந்தளிக்கப்படத்தக்க சந்தர்ப்பங்கள் எத்தனையுள்ளன?

(1) 7 (2) 6 (3) 5

09. வீதியொன்றை அலங்கரிக்க 25 கம்பங்களில் சிவப்புநிறக் கொடிகள் கட்டப்பட்டன. இத்தகைய இரு கம்பங்களுக்கிடையே 2 அலங்காரத் தாவரங்கள் வைக்கத் தீர்மானிக்கப்பட்டது எனின் அவ் இடைவெளிகளில் வைக்கத் தேவையான அலங்காரத் தாவரங்கள் எத்தனை?

(1) 25 (2) 48 (2) 50

10. A, B ஆகிய இருவர் ஒரே இடத்திலிருந்து ஒரே திசை நோக்கி பயணம் ஒன்றை ஆரம்பித்தனர். A என்பவர் மோட்டார் சைக்கிளில் மணிக்கு 40 km வேகத்திலும் B என்பவர் துவிச்சக்கர வண்டியில் மணிக்கு 16 km வேகத்திலும் பயணித்தனர் எனின் 15 நிமிடங்களில் A, B ஆகிய இருவருக்கும் இடையிலான தூரம் யாது?

(1) 4 km (2) 6 km (3) 10 km

11. கலந்துரையாடல் ஒன்று ஒழுங்கு மாறிக் கிடக்கின்றது.

A - பாடசாலைக்கு எப்படிப் போவது? நனைந்து போவேன்.

B - இன்று மழை பெய்யுமா? வானம் இருண்டிருக்கின்றது.

C - குடையை எடுத்துச் செல்ல மறக்க வேண்டாம்.

D - நேற்றுப் பகல் முழுவதும் மழை பெய்தது. இன்று மழை பெய்யும்போல் தெரிகிறது.

இக்கலந்துரையாடலை சரியாக ஒழுங்கு படுத்தினால் கிடைக்கும் விடையினைத் தெரிவு செய்க

(1) ADCB (2) BDAC (3) CDBA

12. எண்கோலத்தை விளங்கி வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க



(1) 54 (2) 57 (3) 69

13. தரப்பட்டுள்ள அட்டவணையிலுள்ள சொற்களுக்கிடையிலான தொடர்பினை விளங்கி P, Q ஆகிய இடைவெளிகளுக்குப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.

மழை	P	சூரியன்
வெள்ளம்	காயங்கள்	உலர்தல்
Q	மரணம்	வறட்சி

(1) உதவி, ஆபத்து (2) விபத்து, நிலச்சரிவு (3) மருத்துவமனை, அறுவடை

14. என்னிடம் சில நாணயங்கள் உள்ளன. அவற்றில் 8 ஐத் தவிர ஏனையவை 1 ரூபாய் நாணயங்கள். 8 ஐத் தவிர ஏனையவை 2 ரூபாய் நாணயங்கள், 8 ஐத் தவிர ஏனையவை 5 ரூபாய் நாணயங்கள். என்னிடமுள்ள நாணயங்களின் எண்ணிக்கை யாது?

(1) 12 (2) 14 (3) 16

15. A, B ஆகிய இரு தொகுதிகளிலும் மாம்பழங்கள் உள்ள பெட்டிகள் காணப்படுகின்றன. இரு தொகுதிகளிலும் உள்ள மாம்பழங்களின் எண்ணிக்கை சமனாவதற்குச் செய்ய வேண்டிய மாற்றத்தைத் தெரிவு செய்க.

A	4	3	2	1
B	5	4	3	6

(1) தொகுதி A இல் 3 உம் தொகுதி B இல் 5 உம்

(2) தொகுதி A இல் 4 உம் தொகுதி B இல் 5 உம்

(3) தொகுதி A இல் 2 உம் தொகுதி B இல் 6 உம்

16. தரப்பட்டுள்ள கோலத்தை விளங்கி □ + ○ இன் பெறுமதியைத் தெரிவு செய்க.

★ + △ + ★ + ○ + △ = 40

★ + ○ = 15

★ + △ = 16

□ + △ = 19

(1) 20 (2) 19 (3) 18

17. கொழும்பிலிருந்து கண்டிக்கு 30 நிமிடங்களுக்கொரு பேருந்து புறப்படும். முதலாவது பேருந்து காலை 5.00 மணிக்குப் புறப்படும். பேருந்து கண்டியைச் சென்றடைய 4 மணித்தியாலங்களும் 30 நிமிடங்களும் எடுக்கும். கண்டியைச் சென்றடைந்த பேருந்துகள் ஒவ்வொன்றும் 30 நிமிடங்களில் மீண்டும் கொழும்பை நோக்கிப் புறப்படும். கொழும்பிலிருந்து புறப்பட்ட எத்தனையாவது பேருந்து மாலை 4.00 மணிக்கு மீண்டும் கொழும்பை வந்தடையும்?

(1) 3ஆவது பேருந்து (2) 4ஆவது பேருந்து (3) 5ஆவது பேருந்து

18. முதலில் தரப்பட்ட கடதாசியை உருவில் உள்ளவாறு நான்காக மடித்துத் துழையிட்டு விரிக்கும் போது கிடைக்கும் வடிவத்தைத் தெரிவு செய்க.



(1) (2) (3)

வரைபடத்தை அவதானித்து 19, 20 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.



A - விளையாட்டில் சிறந்து விளங்கும் பிள்ளைகள் - 25 பேர்

B - இசையில் சிறந்து விளங்கும் பிள்ளைகள் - 18 பேர்

C - சித்திரம் வரைவதில் சிறந்து விளங்கும் பிள்ளைகள் - 30 பேர்

19. இவ் ஆய்வானது எத்தனை பிள்ளைகளிடம் நடாத்தப்பட்டுள்ளது?

(1) 59 (2) 66 (3) 70

20. இசைக்கலை மற்றும் சித்திரம் வரையும்கலை ஆகிய இரண்டில் ஒன்றில் மாத்திரம் சிறந்து விளங்கும் பிள்ளைகள் எத்தனை பேர்?

(1) 38 (2) 34 (3) 48

21. 31 நாட்களைக் கொண்ட மாதம் ஒன்றில் 5 புதன்கிழமை, 5 வியாழக்கிழமை, 5 வெள்ளிக்கிழமை உண்டு. அம்மாதம் 5 ஆம் திகதி என்ன கிழமை?

(1) வெள்ளிக்கிழமை (2) சனிக்கிழமை (3) ஞாயிற்றுக்கிழமை

22. இலங்கை நேரப்படி 01:30 மணிக்கு ஜப்பானுக்குப் புறப்பட்ட விமானம் 5 மணித்தியாலம் 30 நிமிடங்கள் பயணித்து ஜப்பான் நேரம் 10:30 மணிக்கு தரையிறங்கியது. இலங்கை நேரத்திற்கும் ஜப்பான் நேரத்திற்கும் இடையிலான நேர இடைவெளி யாது?

(1) 3 மணித்தியாலம் 30 நிமிடங்கள்

(2) 3 மணித்தியாலம்

(3) 5 மணித்தியாலம் 30 நிமிடங்கள்

A, B, C, D, E, F ஆகிய கட்டங்களினூடாக நீர் பாய்ந்தோடும் முறை அம்புக்குறிகளால் காட்டப்படுகிறது. அதனை அவதானித்து 23, 24 ஆகிய வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்க.



23. தனது கட்டத்திலிருந்து எந்தவொரு கட்டத்திற்கும் நீரைப் பாய்ந்தோட விடாத கட்டம் எது?

(1) E (2) F (3) B

24. எந்தவொரு கட்டத்தினுள் இருந்தும் தனது கட்டத்தினுள் நீரைப் பாய்ந்தோட விடாத கட்டம் எது?

(1) A (2) D (3) F

25. தரப்பட்டுள்ள உருவில் காணப்படும் முக்கோணிகள் எத்தனை?



(1) 12 (2) 13 (3) 14

26. ஒரு பெட்டியில் சிவப்பு, மஞ்சள்நிறப் பந்துகள் 31 உள்ளன. அதில் சிவப்புநிறப் பந்துகளின் இருமடங்கிலும் 5 குறைவாக மஞ்சள்நிறப் பந்துகள் உள்ளன. பெட்டியில் உள்ள மஞ்சள்நிறப் பந்துகள் எத்தனை?

(1) 12 (2) 24 (3) 19

27. தரப்பட்டுள்ள உருவை Aஇல் இருந்து பார்க்கும்போது தோன்றும் வடிவத்தில் எத்தனை செவ்வகங்கள் தென்படும்?



(1) 8 (2) 9 (3) 10

28. கடிகாரம் ஒன்றில் நிமிடமுள் சரியாகப் பன்னிரண்டில் இருக்கும்போது மணிமுள்ளுக்கும் நிமிட முள்ளுக்கும் இடையிலானகோணம் செங்கோணத்திலும் குறைவாகத் தோன்றும் சந்தர்ப்பங்கள் எத்தனை உள்ளன?

(1) 2 (2) 3 (3) 4

29. ஒரு சதுரவடிவ நிலத்தைச் சுற்றி 6 நிரைகளில் வேலிக்கம்பிகள் கட்டவேண்டியுள்ளது. 480 மீற்றர் கம்பி 3 நிரைகளுக்கே போதுமானதாக இருந்தது. காணியின் ஒருபக்க நீளம் யாது?

(1) 40 மீற்றர் (2) 80 மீற்றர் (3) 120 மீற்றர்

30. அருகிலே தரப்பட்டுள்ள அளவுடைய வட்டங்கள் பலவற்றைக் கொண்டு இவ்வுரு ஆக்கப்பட்டுள்ளது. Pஇல் இருந்து Q வரையான நீயம் யாது?





(1) 50 cm (2) 120 cm (3) 170 cm

31. தரப்பட்டுள்ள எண் அட்டைகளில் காணப்படும் பெறுமானங்களின் அடிப்படையில் அவற்றை ஏறுவரிசையில் ஒழுங்கு படுத்த வேண்டுமாயின் குறைந்தது எத்தனை எண் அட்டைகளின் இடத்தினை மாற்ற வேண்டும்?

10	30	70	40	50	20	60

(1) 2 (2) 3 (3) 4

32. வரிசை ஒன்றில் ராதா மற்றும் மானசாவுக்கு இடையே 6 பிள்ளைகள் நிற்கின்றனர். மானசா மற்றும் பாத்திமாவுக்கு இடையே 9 பிள்ளைகள் நிற்கின்றனர். ராதாவுக்கும் பாத்திமாவுக்கும் இடையே இருக்க முடியாத பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?

(1) 2 (2) 16 (3) 19

33. A, B, C, D, E ஆகிய ஐந்து பிள்ளைகள் தெற்குத்திசை நோக்கி ஒருவர்பின் ஒருவராக வரிசையில் நிற்கின்றார்கள். A என்பவர் மூன்று பிள்ளைகளுக்கப் பின்னால் நிற்கின்றார். B என்பவர் முதலாவதாகவும் இல்லை அதேவேளை இறுதிலும் இல்லை ஆனால் அவருக்குப் பின்னால் இரண்டுபேர் நிற்கின்றனர். D என்பவர் வரிசையில் முதலாவதாக நன்றால் இறுதியில் நிற்கும் பிள்ளை யார்?

(1) A (2) B (3) C

34. ஒருவர் காலையில் தனது வீட்டுத்தோட்டத்தைச் சுற்றி நடந்த பாதையை கீழுள்ள படம் காட்டுகிறது.



அவர் நடக்க ஆரம்பித்தது கிழக்குத்திசை நோக்கி எனின் அவரின் நழல் அவரது வலக்கைப் பக்கமாக விழுந்த தடவைகளின் எண்ணிக்கை யாது?

(1) 3 (2) 4 (3) 5

35. சதுரவடிவக் காணி ஒன்றில் சம இடைவெளிகளில் வேலித்தூண்கள் நடப்பட்டுள்ளன. அச்சதுர வடிவக் காணியில் A இலிருந்து ஒன்று, இரண்டு என எண்ணிவரும்போது B இல் 12 ஆவது தூண் காணப்பட்டது எனின் அச்சதுர வடிவக் காணியைச் சுற்றி காணப்படும் வேலித் தூண்களின் எண்ணிக்கை யாது?



(1) 24 (2) 20 (3) 22

36. கீழே தரப்பட்டுள்ள தாயக்கட்டையில் மூன்று முகங்களிலும் இலக்கங்கள் தென்படுகின்றன. எமது கண்களுக்குப் புலப்படாமல் இருக்கும் முகங்களில் காணப்படும் இலக்கங்கள் எமது கண்களுக்குப் புலப்படும் இலக்கங்களின் இரு மடங்காக எதிர்ப்பக்கங்களில் காணப்படுகின்றன. புள்ளிக் கோட்டின் வழியாகத் தாயக்கட்டையினை உருட்டிச் சென்று கட்டம் A இல் நிறுத்தினால் தாயக்கட்டையின் மேற்புறத்தே தென்படும் இலக்கம் எது?



(1) 6 (2) 8 (3) 10

37. முக்கோணி A இலிருந்து B அளவுடைய முக்கோணிகள் எத்தனை வெட்டி எடுக்க முடியும்?



(1) 2 (2) 4 (3) 6

38. சந்திரனிடம் மஞ்சள், சிவப்பு மற்றும் நீலம் ஆகிய நிறங்கள் மாத்திரமே உள்ளன. அம்மூன்று நிறங்களையும் பயன்படுத்தி அருகருகே ஒரே நிறம் வராத வகையில் இவ்வுருவை நிறந்தீட்ட,



(1) முடியும்

(2) முடியாது

(3) இன்னும் ஒரு நிறம் தேவை

39. தரப்பட்டுள்ள பொருட்களின் விலைகளை அவதானித்து இரண்டு புத்தகங்களையும் இரண்டு பென்சில்களையும் வாங்கத் தேவையான பணத்தொகையைத் தெரிவு செய்க



ரூபாய் 91.00



ரூபாய் 139.00



ரூபாய் 76.00

(1) ரூபாய் 150.00 (2) ரூபாய் 154.00 (3) ரூபாய் 170.00

40. கீழே A, B, C, D என்ற நான்கு படச்சட்டகங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றை நன்கு அவதானித்து ஒழுங்கு படுத்தினால் கிடைக்கும் விடையினைத் தெரிவு செய்க.



A B C D

(1) C A D B (2) B C A D (3) A C B D

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

කලාප අධ්‍යාපන කාර්යාලය, සමන්තුරේ
வலயக் கல்வி அலுவலகம், சம்மாந்துறை
Zonal Education Office, Sammanthurai

5

DIAGNOSTIC TEST FOR GRADE FIVE STUDENTS FOR FINDING THE STUDENTS LEARNING ABILITIES - 2025

மாணவர்கள் கற்கும் திறனை மதிப்பீடு செய்வதற்காகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் ஆய்ந்தறி மதிப்பீடு - 2025

2

வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் ....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

- உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக் கோட்டின்** மீது எழுதுக.
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரியவிடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக. (சில வினாக்களுக்கு உப பகுதிகள் உள்ளன)
- விடையின்கீழ் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது கோட்டினை மாத்திரம் இடுக.
- விடைகள் எழுதப்படவேண்டிய வினாக்களில் விடைகளைப் புள்ளிக் கோட்டின்மீது எழுதுக.
- மூன்று விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் சரியான விடையைத் தெரிவு செய்க.
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டதத்திற் கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப் படுத்துகின்றேன்	
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப் படுத்துகின்றேன்.	
மதிப்பீட்டுப் புள்ளிகள் உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்	
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும்.	

[பக்கம் 2 ஐப் பார்க்க

01. **பின்வரும் உரைப்பகுதியை வாசிக்குக.**

அன்று ஞாயிற்றுக் கிழமை குமுதனும் அவனது நண்பர்களும் குமுதனின் வீட்டிற்கு அருகில் உள்ள வயல் வெளியைநோக்கி நடந்து சென்றனர். அதுவொரு மாலைவேளை சூரியனின் பொற்கதிர்கள் நெற்கதிர்களில் பட்டு நெல் மணிகளை பொன்மணிகளாக மெருகேற்றியது. நடை பாதையில் இருமருங்கிலும் வயல் வெளிகளில் காணப்பட்ட நெற்கதிர்களைப் பார்த்த குமுதனின் நண்பர்களில் ஒருவனான அமுதன் ஆசையில் வயலில் இறங்கி நெற்கதிர் ஒன்றைப் பிடுங்கி அதன் நெல் மணிகளை வாயில் இட்டு கொறித்துக் கொண்டே நண்பர்களுடன் நடந்தான்.

அப்போது பட்டாசு வெடி ஒலி கேட்டதும் நெற்குருவிகள் ஒலி எழுப்பிய வண்ணம் பாட்டம் பாட்டமாக அச்சத்தினால் மேலே எழுந்து பறந்து சென்றன. அவற்றிற்கிடையே வாயிலே நெற்கதிருடன் கிளியொன்றும் காட்டை நோக்கி பறந்து சென்றது. விவசாயிகள் பிராணிகளுக்குப் பாதிப்பு ஏற்படாத வண்ணம் பட்டாசு கொழுத்தி அவற்றை விரட்டி தமது நெல் மணிகளைப் பாதுகாத்தனர். வயல் நடுவே வெருளி ஒன்றும் பிராணிகளை விரட்ட வைக்கப்பட்டிருந்தது. வெருளியின் தொப்பி சூரியனின் ஒளிக் கதிர்பட்டு பளபளத்தது.

உரைப்பகுதியை கருத்திற் கொண்டு விடை எழுதுக.

(i) நடை பாதையில் இருமருங்கிலும் காணப்பட்டது எது?

:..

(ii) அமுதன் நெற்கதிரை பிடுங்கி என்ன செய்தான்?

:..

(iii) நெற்குருவிகள் ஏன் ஒலியெழுப்பிக் கொண்டு மேலே பறந்து சென்றன?

:..

(iv) கிளி நெற்கதிரை எடுத்துக் கொண்டு எதைநோக்கிப் பறந்தது சென்றது?

:..

(v) நெல் மணிகளை பொன்மணிகளாக மெருகேற்றியது எது?

:..

(vi) வயலில் பிராணிகளை விரட்ட விவசாயிகள் கையாண்ட உத்திகளில் ஒன்று பட்டாசு கொழுத்துவதாகும். பந்தியில் உள்ள மற்றுமொரு உத்தி எது?

:..

(vii) "குருவிகள் பறந்து சென்றன" என்பதை நிகழ்கால ஒருமை வாக்கியமாக மாற்றி எழுதுக.

:..

02. **கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(i) காலையில் எழுந்தவுடன் நாம் செய்ய ....(வேண்டியன / வேண்டியவை) யாவை?

(ii) தோட்டத்திலுள்ள ஒவ்வொரு ....(மலரும் / மலர்களும்) அழகானவை.

(iii) நாம் அனைவரும் பேருந்தில் கதிர்காமத்துக்குப் ....(போனார்கள் / போனோம்)

(iv) எங்கள் பாடசாலையில் நிறைய................................. (வளங்கள் / வழங்கள்) உண்டு.

(v) .... (அது / அவை) ஓர் அழகான மலைத்தொடர்.

03. **பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் சரியான சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக.**

(i). 1. மணத்துனிவு 2. மனத்துணிவு 3. மனத்துனிவு 4. மணத்துணிவு

(ii) 1. திடசந்தர்பபம் 2. திடசந்தற்பம் 3. திடசங்கற்பம் 4. திடசங்கர்பபம்

04. (i) **பின்வரும் வாக்கியத்தை எதிர்கால ஒருமை வாக்கியமாக மாற்றி எழுதுக.**

நேற்று நாங்கள் கல்விச் சுற்றுலா சென்றோம்.

....

(ii) **சேர்த்தெழுதுக.** மக்கள் + பேறு = ...

[பக்கம் 3 ஐப் பார்க்க

சுட்டெண் : ....

05. பின்வரும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பழமொழியைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

முக்கியமானவர் இன்றி எக்கருமமும் நடைபெறுவதில்லை

....

06. பின்வரும் வாக்கியத்தில் காணப்படும் எழுவாய்ச் சொல்லை தெரிவுசெய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

தோட்டத்தில் பயிர்கள் செழித்து வளர்ந்துள்ளன. ....

07. பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

ஞயம்பட உரை என்று ஔவையார் கூறுவதன் பொருள் என்ன

08. தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக்குக.

வையுங்கள் / பற் தூரிகைப் / பின்னர் / பெட்டிக்குள் / துலக்கிய / பற் தூரிகையைப் / பல்

....

09. (i) தரப்பட்டுள்ள குறுக்கெழுத்துக் கட்டங்களை பூரணப்படுத்துக.

இடமிருந்து வலம்

1. "துக்கம்" என்பதன் எதிர்ச்சொல்
3. சந்தேகத்தைக் குறிக்கும் சொல்

மேலிருந்து கீழ்

2. உண்ண உண்ணத் தித்திப்பது.



(ii)

விநாயகர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தரம் ஐந்தில் கல்வி பயிலும் சங்கவி, சுந்தரமூர்த்தியின் பத்து வயது மகளாவார். இவர் ஒரு திறமையான மாணவி ஆவார். இவரின் சித்தப்பா சண்முகமூர்த்தியும் அதே பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றுகின்றார்.

மேற்படி தகவலை அடிப்படையாகக் கொண்டு பந்தியில் குறிப்பிடப்படும் மாணவியின் முழுப் பெயரை எழுதுக.

10. பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலேயே எழுதுக.



11. கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியங்களாக்கி எழுதுக.

(i) you / pet ? / Do / a / have :..

(ii) book / I / a / am / reading :..

12. ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லுக்கும் உரிய தமிழ்ச்சொல்லை எழுதுக.

(i) Cloud -..................................... (ii) Sparrow - ....

13. பெப்போல் (පැපොල්) என்ற சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

....

14. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தினைத் தமிழில் எழுதுக.

தம்பி மீண்டும் வாருங்கள் : ....

15. 6999, 6969, 9969, 6996 என்ற மூன்று எண்களிலும் சிறிய எண்ணின் எண்பெயரை எழுதுக.

....

16. ஒன்றினிடத்து இலக்கம் 7, பத்தினிடத்து இலக்கம் 0, ஆயிரத்தினிடத்து இலக்கம் 4, நூறினிடத்து இலக்கம் 2, பத்தாயிரத்தினிடத்து இலக்கம் 6 ஆகவுள்ள எண்ணை இலக்கங்களில் எழுதுக?

:...

17. ஒரு பாடசாலையில் 2025 ஆம் ஆண்டு தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைவர் என எதிர்பார்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை வரைபு காட்டுகின்றது.

தரம்	மாணவர்களின் எண்ணிக்கை
தரம் - 5A	///// /////
தரம் - 5B	///// ///// ///// /
தரம் - 5C	///// ///
தரம் - 5D	

(i) தரம் - 5B இல் சித்தியடைவர் என எதிர்பார்க் கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை தரம் - 5D இல் எதிர்பார்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையின் நான்கு மடங்காகும்.
தரம் 5D இல் எதிர்பார்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை வரைபில் குறித்துக் காட்டுக.

(ii) அப் பாடசாலையில் சித்தியடைவர் என எதிர் பார்க்கப்படும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

:...

18.

8	0
9	3

அடைப்பில் உள்ள எல்லா இலக்கங்களையும் பயன்படுத்தி எழுதக்கூடிய மிகச்சிறிய எண்ணுக்கும் மிகப்பெரிய எண்ணுக்கும் இடையிலான வித்தியாசம் என்ன?

:...

19. மாணவர்களுக்கிடையே நடைபெற்ற போட்டி ஒன்றில் சுரேஸ் சேகரித்த முத்திரைகள் 1020 ஆகும். கண்ணன் சேகரித்த முத்திரைகள் சுரேஸ் சேகரித்த முத்திரைகளிலும் பார்க்க 105 இனால் கூடியது. கமலா சேகரித்த முத்திரைகள் சுரேஸ் சேகரித்த முத்திரைகளிலும் பார்க்க 105 இனால் குறைவானது. மூவரும் சேகரித்த முத்திரைகளின் மொத்த எண்ணிக்கை யாது?

:...

20. 75 மாம்பழங்களில் ஐந்தில் மூன்று [$\frac{3}{5}$] பங்கு எத்தனை மாம்பழங்களாகும்?

:...

21. இரு வட்ட முகங்களையும் ஒரு வளைவான முகத்தையும் கொண்ட திண்ம உருவின் பெயரை எழுதுக.

:...

22. பயணி ஒருவர் 21km தூரத்தில் 17km 50m தூரத்தைப் பேருந்திலும் மீதித் தூரத்தை நண்பனோடு துவிச்சக்கர வண்டியிலும் பயணித்தார். அவர் துவிச்சக்கர வண்டியில் பயணித்த தூரம் யாது?

:................ km .... m

23.



மன்ஹா இரு பென்சில் துண்டுகளின் நீளத்தை அளப்பதற்காகப் பின்வரும் உருவில் காட்டப்பட்டுள்ளவாறு உடைந்த சென்ரிமீற்றர் கோல்கள் இரண்டைப் பயன்படுத்தினாள். இரு பென்சில் துண்டுகளின் நீளங்களுக்கிடையிலான வித்தியாசம் யாது?

....................................சென்ரிமீற்றர்

24. தரப்பட்டுள்ள உருவில் 0.5 பகுதியை நிழற்றிக்காட்டுக

25. ஒரு விளையாட்டுக் குழுவினர் மு.ப. 11.30 இற்குத் தமது பயிற்சியைத் தொடங்கினர். அவர்கள் பி.ப. 1.10 இற்குப் பயிற்சியை முடித்துக் கொண்டனர். பயிற்சி நடவடிக்கைகளுக்காக விளையாட்டுக் குழுவினரால் செலவிடப்பட்ட நேரம் எவ்வளவு?

:..

26. 749 மாணவர்கள் கல்விச் சுற்றுலா செல்வதற்காக 7 பேருந்துகள் ஏற்பாடு செய்யப்பட்டன. ஒவ்வொரு பேருந்திலும் சமமான எண்ணிக்கைகளில் மாணவர்கள் பயணம் செய்தனரெனின், ஒரு பேருந்தில் பயணம் செய்த மாணவர்களின் எண்ணிக்கை யாது?

:..

27. அயான் ஓர் இடத்திலிருந்து வடக்குத் திசையில் 9m சென்று அவனது இடதுகைப்பக்கமாகத் திரும்பி மேலும் 9m சென்றான். அவ்விடத்திலிருந்து தெற்குத் திசையில் 9m சென்றான் எனின் அவன் இப்போது பயணத்தை ஆரம்பித்த இடத்திலிருந்து எந்தத் திசையில் உள்ளான்?

:..

28. பின்வரும் சிட்டையின் வெற்றிடங்களைப் பூரணப்படுத்துக.

பொருள்	வாங்கிய அளவு	1kg விலை		பெறுமதி	
		ரூபாய்	சதம்	ரூபாய்	சதம்
தேயிலை	750g	(i)		285	00
சீனி	100g	430	00	(ii)	
			மொத்தம்	328	00

29. பாத்திரம் ஒன்று கொள்ளும் நீரின் கொள்ளவு மூன்று லீற்றர் ஆகும். அப்பாத்திரத்தில் 1 லீற்றர் 800 மில்லிலீற்றர் அளவு நீர் இடப்பட்டுள்ளது. பாத்திரத்தில் தற்போது உள்ள நீரை ஒவ்வொன்றும் 150 மில்லிலீற்றர் கொள்ளளவுடைய எத்தனை போத்தல்களில் நிரப்பலாம்?

:..

- 30 தொடக்கம் 59 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமாக விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

30. ஓரளவு ஒத்த வடிவத்தைக் கொண்ட இலைக் கூட்டம்?
(1) வெண்டி, புளியம் இலை (2) கரும்பு, அகத்தி (3) பலா, கத்தாப்பு

31. காசித்தும்பைச் செடிகள் இரண்டை வேர்கள் அறாதவாறு கவனமாகப் பிடுங்கியெடுத்து அவற்றில் ஒரு செடியை நிறமூட்டிய நீர்ப் பாத்திரமொன்றினுள்ளும் மற்றைய செடியை தெளிவான நீருள்ள பாத்திரம் ஒன்றினுள்ளும் இட்டு வேர்ப்பகுதி மாத்திரம் அமிழுமாறு நான்கு நாட்கள் வரை வைத்து விஜய் அவதானித்தான். அவன் இச்செயற்பாட்டை செய்தமைக்கான காரணம் யாதாக இருக்கலாம்?
(1) தாவரங்கள் தண்டின் மூலம் சுவாசிக்கின்றன என்பதைக் கண்டறிய
(2) தாவரங்கள் இலைகளின் மூலம் உணவு தயாரிக்கின்றன என்பதைக் கண்டறிய
(3) தாவரங்கள் வேரின் மூலம் நீரை உறுஞ்சுகின்றன என்பதைக் கண்டறிய

32. “வண.எஸ். மஹிந்த தேரர்” என்பவரின் வரலாறு இலங்கையர்களுக்கு முக்கியத்துவம் பெறுவது
(1) நவ லங்கா சமய பாடசாலை, ஆங்கிலப் பாடசாலை ஆகியவற்றை ஆரம்பித்தமையால்
(2) சிலோன் நஸனல் ரிவீவ் எனும் சஞ்சிகையின் பிரதம ஆசிரியராக இருந்தமையால்
(3) தேசியக் கொடி, தேசிய கீதம் ஆகியவற்றில் கமிட்டி அங்கத்தவராக இருந்தமையால்

[பக்கம் 3 ஐப் பார்க்க

33. இலங்கையின் தேசியக்கொடி தொடர்பான தவறான கூற்று எது?
   (1) சிவப்பு நிறப் பின்னணி தேசத்தின் மகத்துவத்தைக் குறிக்கின்றது.
   (2) செம்மஞ்சள், பச்சை நிறப்பட்டிகள் தமிழ், முஸ்லிம் மற்றும் ஏனைய இன மக்களைக் குறிக்கின்றது.
   (3) முழுக் கொடியையும் சுற்றி வர இடப்பட்டிருக்கும் மஞ்சள் நிற பட்டி சிங்கள இன மக்களைக் குறிக்கின்றது.

34. சகல சமயத்தவர்களும் யாத்திரை செல்லும் இடமாக அமையாதது?
   (1) கதிர்காம யாத்திரை (2) சிவனொளிபாதமலை யாத்திரை (3) ஹஜ் யாத்திரை

35. இலைகளில் முட்கள், சளியம், மெழுகுப் படை, தடித்த இலை போன்ற இயல்புகளைக் கொண்ட தாவரங்கள் எவ்வகைச் சூழலில் அதிகமாக வாழும் தன்மையைக் கொண்டது
   (1) வறண்ட சூழல் (2) கண்டற் சூழல் (3) நீர்ச் சூழல்

36. சில்லும் அச்சாணியும் பயன்படுத்தி வேலையை இலகுவாக்கும் சந்தர்ப்பம் அல்லாதது?
   (1) துவிச்சக்கர வண்டியில் பயணம் செய்தல்
   (2) பாடசாலை ஏணிப் படியில் ஏறுதல்
   (3) திருகாணி செலுத்தியால் திருகாணி செலுத்துதல்

37. திசைகாட்டி ஒன்றிற்கு அருகே சட்டக்காந்தமொன்றை கொண்டு செல்லும்போது உமது அவதானம் என்ன?



   (1) திசைகாட்டியின் சுட்டி அசையும்
   (2) திசைகாட்டியின் சுட்டி சுழலும்
   (3) திசைகாட்டியின் சுட்டியில் எதுவித மாற்றமும் நிகழாது

38. காலைக்கூட்டத்தில் மயக்கம் ஏற்பட்ட மாணவன் காந்தனுக்கு, முதலுதவி பயிற்சி பெற்றவன் என்ற வகையில் நீங்கள் உடனடியாகச் செய்ய வேண்டிய விடயம்.
   (1) மாணவனுக்கு நீர் புகட்டுவதற்கு முயற்சித்தல்
   (2) மாணவனின் நெஞ்சின் மீது இருகைகளாலும் மெதுவாக அழுத்தி மூச்சு வர முயற்சித்தல்
   (3) மாணவனுக்கு நன்றாக மூச்செடுத்து விடக்கூடியவாறான சூழலை வழங்குதல்

39. பலகை ஒன்றிலிருந்து ஆணியை பிடுங்குவதற்கு சுத்தியலைப் பயன்படுத்தும் மிகச் சரியான முறை

(1)

(2)

(3)

40. பெருக்குமரம், நாகமரப்பூங்கா என்பன காணப்படும் இடங்கள் முறையே,
   (1) மன்னார், அநுராதபுரம்
   (2) மன்னார், பொலன்னறுவை
   (3) அநுராதபுரம் , கண்டி

41. போலியான, தரக்குறைவான பண்டங்கள் விற்பனை செய்யப்படுகின்றபோது அவை குறித்து நாம் அறிவிக்க வேண்டியது,
   (1) மாநகர சபை, பிரதேச சபை அதிகாரிகளுக்கு அறிவிக்க வேண்டும்
   (2) பொலிஸ் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும்
   (3) நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைக்கு அறிவிக்க வேண்டும்

42. நீங்கள் பாடசாலைக்கு கொண்டுவந்து உண்ட உணவின் எஞ்சியதைப் போடுவதற்கு பயன்படுத்தப்படும் தொட்டியின் நிறம் என்ன?
   (1) நீலம் (2) பச்சை (3) செம்மஞ்சள்

[பக்கம் 3 ஐப் பார்க்க

44. வீட்டுத்தோட்டத்தில் பயிர்களுக்கு இடையில் செவ்வந்திச் செடியை நடுவதன் நோக்கம்.
   (1) வீட்டுக் தோட்டத்திற்கு அழகைச் சேர்ப்பதற்கு
   (2) பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும் பூச்சிகளை விரட்டுவதற்கு
   (3) வீட்டுத்தோட்டத்தின் இட அளவை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கு

45. அருகில் தரப்பட்டுள்ள தாவர வேரில் **A** குறிக்கும் வேரின் பெயர் என்ன?
   (1) பக்கவேர்
   (2) நாருருவேர்
   (3) ஆணிவேர்



46. மனித உடலில் இருந்து கழிவுப் பொருட்கள் சீராக வெளியேறுவதற்கு பிரதான காரணமாக அமைவது,
   (1) தினமும் போதுமான அளவு நீர் அருந்துதல்
   (2) ஒவ்வெரு நாளும் குறிப்பிட்ட நேரத்திற்கு உடற் பயிற்சி செய்தல்
   (3) வேளை உணவுகளில் உடன் உணவுகளைச் சேர்த்துக் கொள்ளல்

47. ஞானஸ்தானம், சீடர்களின் பாதந்தோய்த்தல் போன்றவற்றுடன் தொடர்புடைய சமயத்தவர்?
   (1) பௌத்தர்கள் (2) தமிழர்கள் (3) கிறிஸ்தவர்கள்

48. மண்ணை வளப்படுத்துவதற்கு பின்பற்ற வேண்டிய செயல்களில் ஒன்று,
   (1) கிரிமிநாசினிகள் காணப்படும் போத்தல்களை கழுவிய நீரை மண்ணுக்குள் ஊற்றுதல்
   (2) அழுகி உக்கலடையக்கூடிய குப்பை கூழங்களை மண்ணுடன் சேர்த்து விடுதல்
   (3) தாவர உணவுகள் அவிக்கப்பட்ட கொதிநீரை மண்ணுக்குள் ஊற்றுதல்

49. உலர் கலங்களுடன் இணைக்கும் கம்பிகளினால் மின்குமிழ்கள் இணைக்கப்பட்டுள்ள மூன்று சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. இதில் மின்குமிழ் மிகவும் பிரகாசமாக ஒளிரும் சுற்று எது?



(1)



(2)



(3)

50. இரவில் நடமாடித் திரியும் பிராணிகள்?
   (1) வௌவால், ஆந்தை, கோட்டான் (2) ஆந்தை, வௌவால், மைனா
   (3) கோட்டான், வௌவால், கிளி

51. இலங்கை மாகாணங்களைக் காட்டும் தேசப்படம் காட்டப்பட்டுள்ளது. இதில் A, B குறிக்கும் மாகாணத்தில் அமையப்பெற்ற மாவட்டங்கள் முறையே,
   (1) புத்தளம் , மொனராகலை
   (2) கேகாலை , பொலனறுவை
   (3) பதுளை , குருநாகல்



52. இலங்கை தகவல் திணைக்களத்திலிருந்து தகவல்களைப் பெற அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்?
   (1) 1929 (2) 1919 (3) 119

53. படத்தில் காட்டப்படும் செயற்பாடு மூலம் அவதானிக்கப்படுவது,
   (1) நீர் வடிகட்டப்படுகின்றது
   (2) மழை பெய்யும் போது மண்ணில் ஏற்படும் மாற்றம் அவதானிக்கப்படுகின்றது
   (3) மழை வீழ்ச்சி அளக்கப்படுகின்றது



54. சின்னமுத்து, கொப்பளிப்பான் போன்ற நோய்கள்,
   (1) காவிகளான ஆட்கள் மூலம் மனிதர்களுக்கு பரவுகின்றன
   (2) அசுத்தமான உணவு, நீர் உட்கொள்ளுவதன் மூலம் மனிதர்களுக்கு பரவுகின்றன
   (3) நோய்க்காவி நுளம்பு தீண்டுவதன் மூலம் மனிதர்களுக்கு பரவுகின்றன

55. இலங்கைக்கு மட்டும் உரித்தான பிராணிகள், தாவரங்களின் கூட்டம்?
   (1) கலவத்தன், நீர்ப்பாம்பு, எண்ணை, மகக்கட்டியா
   (2) மலை மைனா, சிங்கம், தென்னை, எண்ணை
   (3) சிலோன் பர்ட்விங், அணில், நாகமரம், பனை

56. பாதசாரிகள் வீதியைக் கடப்பதற்குரிய ஒளிச்சமிக்ஞையில் சிவப்பு, பச்சை நிற மனித உருவங்கள் குறிப்பது முறையே?



   (1) பாதையை கடத்தலாகாது, பாதையை கடக்குக
   (2) பாதையை கடக்குக, பாதையை கடத்தலாகாது
   (3) பாதையில் நிற்கலாம், பாதையில் நடக்கலாம்

57. புரதம் அடங்கிய உணவுகள்?
   (1) உடலுக்கு சக்தியை வழங்குகின்றது
   (2) உடலின் வளர்ச்சிக்கு உதவுகின்றது
   (3) உடலை நோய்களிலிருந்து பாதுகாக்கின்றது

58. தோட் பந்தணம் இடப்படும் நோயாளி யார்?
   (1) என்பு முறிவு ஏற்பட்டவர்
   (2) நீரில் மூழ்கியவர்
   (3) பாம்பு தீண்டியவர்

59. நீல நிறம் கலக்கப்பட்ட நீர் கொண்ட பாத்திரத்தில் சில பனிக்கட்டிகளையிட்டு சிறிது நேரத்தின்பின் அவதானித்த போது பாத்திரத்தின் வெளிப்பகுதியில் நிறமற்ற நீர்த்துளிகள் காணப்பட்டதை அவதானிக்க முடிந்தது. இதற்கான காரணம் என்ன?
   (1) கண்ணாடி குவளையின் வெளிப்புறத்தில் காணப்படும் வளி குளிர்ச்சியடைந்து நீர்த்துளியாக மாறி குவளையில் வெளிப்புறத்தில் படிந்திருக்கின்றது
   (2) கண்ணாடிக் குவளையிலிருந்து நீர்த்துளி கசிந்திருக்கின்றது.
   (3) நீர் ஆவியாகி கீழ் நோக்கி வழிந்து படிந்திருக்கின்றது.



60. வாழ்நாள் முழுவதும் சுகதுக்கங்களின்போது நாம் சிந்தித்துச் செயற்படுவதற்கும் எமது முன்னேற்றத்திற்கும் தேவையான அறிவுரைகளை வழங்கும் எனது அன்பான ஆசிரியை அல்லது எனது அன்பான ஆசிரியர் எனும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலை தொடர்பு, எழுத்துக்கூட்டல் என்பவையும் சரியாக இருத்தல் வேண்டும்)

1 ....

....

2 ....

....

3 ....

....

வலயக்கல்வி அலுவலகம், சம்மாந்துறை.

தரம் 05, கணிப்பீடு - 02 (25.07.2025)

விடைகள்

வினாப்பத்திரம் - I

வினா இல	விடை இல	வினா இல	விடை இல	வினா இல	விடை இல	வினா இல	விடை இல
01	3	11	2	21	3	31	1
02	2	12	2	22	1	32	3
03	2	13	2	23	3	33	3
04	1	14	1	24	2	34	2
05	3	15	3	25	1	35	3
06	1	16	3	26	3	36	3
07	1	17	2	27	2	37	2
08	3	18	3	28	3	38	1
09	2	19	2	29	1	39	2
10	2	20	2	30	1	40	2

வினாப்பத்திரம் - II

புள்ளி

01. (i) வயல் வெளிகள் 1

(ii) அதன் நெல் மணிகளை வாயில் இட்டுக் கொறித்தான் 1

(iii) பட்டாசு வெடி ஒலியால் 1

(iv) காட்டை நோக்கி 1

(v) சூரியனின் பொற்கதிர்கள் 1

(vi) வெருளி வைப்பது 1

(vii) குருவி பறந்து செல்கிறது 1

02. (i) வேண்டியவை 1

(ii) மலர்களும் 1

(iii) போனோம் 1

(iv) வளங்கள் 1

(v) அது 1

03. (i) 2. மனத்துணிவு 1

(ii) 3. திடசங்கற்பம் 1

04. (i) நாளை நான் கல்விச் சுற்றுலா செல்வேன் 1

(ii) மக்கட்பேறு 1

05. அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது 1

06. பயிர்கள் 1

07. “ஞயம்பட உரை” என்று ஔவையார் கூறுவதன் பொருள் என்ன? 2

08. பல் துலக்கிய பின்னர் பற்தூரிகையை பற்தூரிகைப் பெட்டிக்குள் வையுங்கள் 1

09. (i) 3

	1. சு	2. க	ம்
		ரு	
3. ஐ	ய	ம்	
		பு	

(ii) 1

சு	ந்	த	ர	மூ	ர்	த்	தி		ச	ங்	க	வி

10. (i) 2

K	n	i	f	e

(ii)

S	q	u	i	r	r	e	l

11. (i) Do you have a pet? 1

(ii) I am reading a book 1

12. (i) மேகம் 1

(ii) சிட்டுக்குருவி 1

13. பப்பாசிப் பழம் 1

14. மல்லி ஆயத் என்ன 1

15. ஆறாயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்தொன்பது 2

16. 64207 2

17. (i) //// 2

(ii) 38 2

18. 6741 2

19. 3060 2

20. 45 2

21. உருளை 2

22. 3 km 950 m 2

23. 2 2

24.  அல்லது  2

25. 1 மணித்தியாலம் 40 நிமிடங்கள் 2

26. 107 2

27. மேற்கு 2

28. (i) 380.00 1

(ii) 43.00 1

29. 12 2

30	3	36	2	42	2	49	3	55	1
31	3	37	1	44	2	50	1	56	1
32	1	38	3	45	3	51	1	57	2
33	3	39	1	46	1	52	2	58	1
34	3	40	1	47	3	53	2	59	1
35	1	41	3	48	2	54	1		

29

60. பொருத்தமான வாக்கியங்களுக்குப் **புள்ளி** வழங்குக. 6